## குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 25-04-2025 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

### நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானங்கள்

1) .குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திற்கு மார்சல் நேசமணி அவர்களின் பெயரை சூட்ட தமிழக அரசை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1254 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் நவீன காய்கறி சந்தைக்கு டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பெயரை சூட்ட தமிழக அரசை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1254 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) குழித்துறை நகராட்சி பகுதியில் தொடர் கட்டிடங்கள் அதிகமாக இருப்பதால் தொடர் கட்டுமான பகுதியாக அறிவிக்க தமிழக அரசை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1254 (3) தீர்மானிக்கப்பட்டது.

### 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சி. லலிதா கொண்டு வரும் தீர்மானங்கள்

1) வள்ளிக்கோடு கோவில் பக்கம் உள்ள ஒடையில் சிலாப் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1255 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) இடைவிளாகம் புளிநின்றவிளை திரு. ராஜூ வீட்டு பக்கம் முதல் இடைவிளாகம் ஜங்சன் வரை உள்ள கழிவுநீர் ஒடை மண் நிறைந்தும், உடைந்தும், சில இடங்களில் அகலம் இல்லாமலும் இருப்பதால் அதனை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1255 (2) தீர்மானிக்கப்பட்டது.

7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.U.R. விஜயலெட்சுமி கொண்டு வரும் தீர்மானங்கள்

1) குழித்துறை தபால் நிலையம் ஆத்ம நிலையம் நர்சரி கார்டன் முதல் பக்தசிங் அவர்கள் வீடு வரைக்கும் உள்ள கழிவுநீர் ஒடையில் சிலாப் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1256 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) நீதிமன்றத்தின் பின் பக்கம் திரு. கனீஸ்வரன் வீட்டு பக்கம் முதல் திரு. ராமச்சந்திரன் வீட்டு பக்கம் வரை உள்ள கழிவு நீர் ஒடை பழுதடைந்து உள்ளது. அதனை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1256 (2) தீர்மானிக்கப்பட்டது.

11-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஜெ.கே. றோஸ்லெட் கொண்டு வரும் தீர்மானம்

1) மகளிர் மேல்நிலைப்பள்ளி பின்புறம் நேசம்மா வீடு முதல் ஐயப்பன் வீடு வரை காங்கிரீட் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1257 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) கண்ணக்கோடு முதல் இசக்கியம்மன் கோயில் வரை ஒடை சரி செய்து, சிலாப் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1257 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) 100-வது வாவுபலியை முன்னிட்டு கிருஷ்ணன் கோயில் சாலையில் குழிக்கும் இடத்தை சரி செய்து மூங்கில் கூட்டத்தை வெட்டி சுத்தம் செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1257 (3) தீர்மானிக்கப்பட்டது.

14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.அ. லில்லி புஷ்பம் கொண்டு வரும் தீர்மானம்

1) அக்கிவிளையில் புதிதாக ஒரு மின்கம்பி நாட்டி லைட் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1258 தீர்மானிக்கப்பட்டது.

15-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.பா. ரீகன் கொண்டு வரும் தீர்மானங்கள்

1) 15-வது வார்டுக்கு உட்பட்ட அட்டக்குளம் முதல் கோடியாவிளை இணைப்பு சாலை திரு. ஜார்ஜ் ஸ்டீபன் வீட்டின் முன் உள்ள மின்கம்பம் W-15-S-H P-8 W-15)S.4-P-7 எண் கொண்ட மின்கம்பம் சாலையின் நடுவே உள்ளது. மின்கம்பத்தை ஓரத்தில் மாற்றி வைத்திட வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1259 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) கோடியாவிளை பகுதியில் குடிநீர் இணைப்புக்கு வேண்டி தோண்டப்பட்ட சாலை மிகவும் மோசமாக உள்ளது. சீரமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1259 (2) தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சியால் நடத்தப்பட உள்ள 100-வது வாவுபலி பொருட்காட்சி நுழைவு கட்டணம் பத்து வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்கு ரூ.10/- மற்றும் பெரியவர்களுக்கு ரூ.20/- மேலும் சீருடையில் வரும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு ரூ.5/- என கட்டணம் நிர்ணயம் செய்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.650/2025/அ2.

மன்றத்தீர்மான எண்.1260 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சி வார்டு எண்.17 வடக்கு தெருவில் MP அலுவலகம் முதல் Good Shepherd பள்ளி வரை உள்ள மழைநீர் வடிகால் பழுது ஏற்பட்டு அங்குள்ள குடியிருப்புகளுக்கு இடையூறாகவும் சுகாதாரமின்றியும் உள்ளதால் மேற்கண்ட இடத்தில் பொதுமக்கள் நலன் கருதி புதிதாக மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.5.50 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.284/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1261 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.3

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவில் சுகாதார பணிகளுக்கு கிருமி நாசினிகள் இருப்பு குறைவான நிலையில் உள்ளதாலும் மழை காலங்களில் டெங்கு நோய் தடுப்பு பணிக்கு அதிக அளவு பிளிச்சிங் பவுடர் 5டன், சுண்ணாம்பு தூள் 10டன் தேவை உள்ளது. ஆகையால் மேற்படி பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.3,50,000/-த்தினை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3055/2022/எச்1.

மன்றத்தீர்மான எண்.1262 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.4

குழித்துறை நகராட்சி வார்டு எண்.16-ல் திரு. பீர்முகம்மது தாஜ்நிஷா என்பவருக்கு சொந்தமான கட்டிடத்திற்கு வரி செலுத்தாத காரணத்தினால் குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டது தொடர்பாக மேற்படி நபர் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு எண்.WP(MD)No.7922 of 2025-ன்படி தொடரப்பட்டது. இவ்வழக்கு நடத்தப்பட்ட வகையில் அரசு வழக்கறிஞர் திரு. ஜெயசீலன் என்பவர் ரூ.9500/- கோரியுள்ளார். எனவே மேற்படி வழக்கறிஞருக்கு தொகை ரூ.9500/-ஐ வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.952/2025/அ2.

மன்றத்தீர்மான எண்.1263 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவில் R.R.C-யில் பிளாஸ்டிக் பேக்கிங் செய்வதற்கு (பிளாஸ்டிக் கயிறு) ரோப் வாங்கிய செலவினம் ரூ.15,000/- திரு.ராதாகிருஷ்ணன், மேற்பார்வையாளர் என்பவரால் செலவினம் செய்யப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி தொகையினை துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு. ராதாகிருஷ்ணன் என்பவருக்கு பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3256/2023/எச்1.

மன்றத்தீர்மான எண்.1264 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள கட்டிடங்களுக்கு 2025-2026 முதலாம் அரையாண்டிற்கான சொத்துவரியை 30-04-2025-ம் தேதிக்குள் செலுத்துபவர்களுக்கு 5% ஊக்கத்தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பு நோட்டீஸ்கள் 5000 எண்ணம் அச்சிட்டு வினியோகம் செய்யப்பட்டது- மேற்படி நோட்டீஸ்களுக்கான தொகை ரூ.3000/- வருவாய் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் என்பவரால் செலவு செய்யப்பட்டது. எனவே மேற்படி தொகையினை மேற்படி பணியாளருக்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.706/2025/அ1.

மன்றத்தீர்மான எண்.1265 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சி பகுதிகளில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு மேற்கொண்டு தலைமை நீரேற்று நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மற்றும் நுழைவாயிலில் வளைவு அமைத்திட அறிவுரை வழங்கப்பட்டதின் அடிப்படையில் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.4.30 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2567/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1266 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உள்ள செப்டிக்டேங்கிலுள்ள கழிவுநீரினை நகராட்சியில் உள்ள கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் மூலம் FSTP-க்கு கொண்டு செல்வதற்கு ஒரு லோடுக்கு ரூ.4000/- என நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1138/2025/எச்1.

மன்றத்தீர்மான எண்.1267 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

குழித்துறை நகராட்சியால் நடத்தப்பட உள்ள 100-வது வாவுபலி பொருட்காட்சி உரிமங்களுக்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு கீழ்கண்டுள்ளவாறு செய்தி நாளிதழிடம் இருந்து பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது.

1) தினதந்தி - 61503.76
2) தினகரன் - 36456
3) தினமலர் - 34020
4) தமிழ்முரசு - 25121.26

மேற்படி வரப்பெற்றுள்ள தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.650/2025/அ2.

மன்றத்தீர்மான எண்.1268 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.10

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நாள் 21-03-2025-ல் நடத்தப்பட்ட உயர்மட்ட குழுவிற்கு தயார் செய்யப்பட்ட தணிக்கை பத்திகள் Xerox எடுக்கப்பட்டு 12 புத்தகங்கள் Spiral Binding செய்யப்பட்ட வகைக்கு ரூ.3,150/- Dharshini Global Hub நிறுவனத்திடமிருந்து செலவு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை திரு.கே. சசி என்பவருக்கு பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.574/2020/பி1.

மன்றத்தீர்மான எண்.1269 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.11

குழித்துறை நகராட்சியில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் திறப்பு விழாவினை நாளிதழ் மூலம் விளம்பரம் செய்த வகைக்கு தீக்கதிர் நாளிதழிடமிருந்து ரூ.9950/-க்கான செலவினப்பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையினை தீக்கதிர் நாளிதழ்-க்கு வழங்கிட அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.1270 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.12

குழித்துறை நகராட்சியில் 100-வது வாவுபலி பொருட்காட்சியை முன்னிட்டு நினைவுத்தூண் அமைத்திட நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையரின் அறிவுரையின் பேரில் வார்டு எண்.6 தபால் நிலையம் சந்திப்பில் 100-வது வாவுபலி பொருட்காட்சி நினைவுத்தூண் அமைத்திட ரூ.9.80 இலட்சம் உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1146/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1271 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.13

குழித்துறை நகராட்சி வார்டு எண்.6-ல் 100-வது வாவுபலி பொருட்காட்சி நடைபெறுவதை முன்னிட்டு அருகில் உள்ள வீரன்வேலுதம்பி தளவாய் நினைவு திடலில் வர்ண கற்கள் பதிக்கவும், பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் நகர்மன்ற தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் ரூ.9.50 இலட்சம் உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1148/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1272 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.14

குழித்துறை நகராட்சி வார்டு எண்.6 தபால் நிலைய சந்திப்பில் 100-வது வாவுபலி பொருட்காட்சி நினைவு தூண் அமைத்திட ரூ.9.80 இலட்சம் உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தேர்வு செய்யப்பட்ட இடத்தில் உயர்கோபுர மின்விளக்கு இடையூறாக உள்ளது. அந்த உயர் கோபுர மின் விளக்கை அருகாமையில் மாற்றி அமைக்க ரூ.2.00 இலட்சம் உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1147/2025/இ1.
மன்றத்தீர்மான எண்.1273 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.15

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு 21 வார்டுகளிலும் மனித சக்தியை மிஞ்சிய அளவில் உள்ள புல்புதர்களை அகற்ற (SAW மிஷின்) இயந்திரம் வாங்க வேண்டியுள்ளதால் மேற்படி இயந்திரத்தை வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.30,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1147/2025/எச்1.
மன்றத்தீர்மான எண்.1274 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.16

குழித்துறை நகராட்சியில் 2025-2026-ம் ஆண்டிற்கு புதியதாக குடிநீர் இணைப்பு வழங்கிட உபவிதிகள் கீழ்கண்டவாறு திருத்தியமைக்கப்படுகிறது.

குடிநீர் இணைப்பு கட்டணங்கள்

1) விண்ணப்ப பதிவு கட்டணம் - ரூ.100/-
2) மேற்பார்வை கட்டணம் - ரூ.500/-
3) வைப்புத்தொகை
   i) வீட்டு உபயோகம் - ரூ.3000/-
   ii) தொழிலக இணைப்பு - ரூ.6000/-
   iii) வணிக உபயோக இணைப்பு - ரூ.6000/-

4) சாலை பராமரிப்பு கட்டணம்

| சாலை | 0-30 மீட்டர் நீளத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் | 31-90 மீட்டர் நீளத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் |
|---|---|---|
| மண்/ கருங்கல் சாலை | 2000 | 2500 |
| தார் சாலை | 4000 | 5000 |
| சிமெண்ட் சாலை | 5000 | 6000 |

5) மாதாந்திர கட்டணம் - (மாதம் 1000 லிட்டர் வரை)
   i) வீட்டு உபயோக இணைப்பு கட்டணம் - ரூ. 50/-
   ii) தொழில் இணைப்பு கட்டணம் - ரூ.200/-
   iii) வணிக உபயோக இணைப்பு - ரூ.150/-

மாதம் 1000 லிட்டருக்கு மேல் குடிநீர் பயன்படுத்தப்பட்டால் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.20/- வீதம் கூடுதல் கட்டணம் வசூலித்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2914/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.1275 ஒத்திவைக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.